Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
|---|---|

வேணு : 15 ஜூலை 2010 கானம் :12



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.


Related Websites : www.namadwaar.org
Email:contact@namadwaar.org

NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 15 ஜூலை 2010 கானம் : 12



ஜுன் 6, 2010 - தாராபுரம் மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனையின்பொழுது





தஞ்சாவூர் நவநீதக்ருஷ்ணன் கோவில் பகவத்கீதாபிரவசன மண்டபம்

கீழே: தஞ்சாவூர் ஒருங்கிணைப்பாளர்களுடன் நேரடி சந்திப்பு (ஜுன்9-11)





துபாய் சிந்தி செரிமோனியல் ஹால் – Ancient Wisdom for Modern Times
உபன்யாசம் – ஜூன் 3, 2010 – ஸ்ரீராமானுஜம்





ஜூன்14 – ஸ்ரீயோகிராம்சுரத்குமார் நாமகீர்த்தனம் பூர்த்தியில்
திரு.கங்காராமஸ்வாமி அவர்களுக்கு ஸ்ரீஸ்வாமிஜி பிரசாதம்



மும்பை பார்லே சேவாமண்டல் ஜூன் 6 – சுந்தரகாண்டம் உபன்யாசம் –
சௌ.பூர்ணிமாகுமாரஸ்வாமி




மே30 – சிவகாசி ஸ்ரீயோகிராம்சுரத்குமார் பஜனாச்ரமத்தில் "மதுரஸ்மரணம் – My Guru as I see HIM" தலைப்பில் திரு.பாலகுமாரன் உரை




மதுரபுரி ஆஸ்ரமம்

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 15 ஜூலை 2010 கானம் : 12

உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 02 | ஒரு சாதகரின் டைரிக்குறிப்பு | 15 |
| மதுரமான மஹனீயர் - 172 | 03 | வணங்கும் கைகள்! | 21 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 07 | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 30 |
| பாகவத பழம் -2ம் பாகம்- 4 | 12 | மாலே மணிவண்ணா - 85 | 32 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

இரண்டு பொருள்களில் கவனம் இருக்கும் ஒருவருக்கு, ஒரு பொருளில் கவனம் அதிகமாக, அதிகமாக, மற்றொன்றில் கவனம் தானாகவே குறைந்து, மறைந்து விடும். அதுபோல் இருப்பது இரண்டே இரண்டு; ஒன்று உலகம்; மற்றொன்று இறைவன். இதில், இந்த இரண்டில், எதில் கவனம் அதிகமாக உள்ளதோ அப்பொழுது, மற்றொன்று தானே மறந்து, மறைந்து விடும்.

–மஹாரண்யம் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்



ராகம்: பீம்ப்ளாஸ் / ஆபேரி

தாளம்: ஆதி

எப்படி பாடுவேனோ கண்ணா?
நான் உன்னை எப்படி பாடுவேனோ
(எப்படி)

உன் அழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை
குணங்களை கணக்கிட கணக்கில் ஓர் எண்ணில்லையே
(எப்படி)

கருணைக்கோர் எல்லை என்பதே இல்லை
மஹிமைக்கோர் நிர்ணயம் என்பதே இல்லை
(எப்படி)

உன் அன்பிற்கோர் ஓர் அளவு என்பதே இல்லையே
லீலைகளுக்கும் முடிவென்பது இல்லையே
(எப்படி)

வேதத்திற்கு உனை உணர்த்திட திறமையில்லை
வாதத்திற்கோ நீ அகப்படுவதில்லை
(எப்படி)

முன் அட்டைப்படத்தில்: வட இந்தியாவில் வாழ்ந்த க்ருஷ்ண பக்தையான மஹாத்மா ஆனந்தமயிமா (1896–1982)

# மதுரமான மஹனீயர் – 172

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

ஒருநாள் ஒரு அன்பர், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் வந்து, மந்திர தந்திரங்களை பற்றி, பேசிக்கொண்டிருந்தார். அவர், தன்னுடைய நண்பர் வீட்டில், திடீர் திடீர் என்று கற்கள் விழுகின்றது என்றும், வைத்த பொருள்கள் காணாமல் போகின்றன என்றும், திடீர் திடீர் என்று துணிமணிகளில் நெருப்பு பிடித்து கொள்கின்றது என்றும் பேசிக்கொண்டிருந்தார். அவர் சென்ற பிறகு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம், நான், "இப்படியெல்லாம் கூட நடக்குமா" என்று கேட்டேன். அதற்கு ஸ்ரீஸ்வாமிஜி, ஸ்ரீஅரவிந்தர் ஆஸ்ரமத்தில் கூட இது போல் ஒரு சம்பவம் நடந்தது என்று கூறினார். அது சுவையாக இருந்ததால், உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.



நமது பாரதத்தாயின் தவப்புதல்வர்களில் ஒருவரான ஸ்ரீஅரவிந்தர், வங்காளத்தில் பிறந்தவர். பாரதம் சுதந்திரம் அடைய பாடுபட்டவர். கிருஷ்ண பரமாத்மாவின் அருளுக்கு பாத்திரமானவர். அவர் பாண்டிச்சேரி வந்து தவ வாழ்வு மேற்கொண்டிருந்தார். பிரிட்டிஷ் அரசின் தொல்லைகளிலிருந்து தப்பிக்க வேண்டி , மகாகவி பாரதியாரும் அங்கு இருந்தவர்தான். பல அறிஞர்களும், தேசப்பெரியோர்களும் பெரிதும் மதித்த ஸ்ரீஅரவிந்தர் தோற்றுவித்த ஆச்ரமம் இன்றும் பாண்டிச்சேரியில் உள்ளது. பாரதம் சுதந்திரம் அடையும் முன்னரே, அது பெரிய போராட்டமின்றியே கூட சுதந்திரம் அடைந்து விடும் என்றும், அதற்கு இறைவனின் ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது என்றும் கூறியவர் ஸ்ரீஅரவிந்தர். அரவிந்தருக்கு சீடர்கள் பலர்



இருந்தனர். அவர்களில் மிகவும் கொண்டாடப்படுபவர் "அன்னை" என அழைக்கப்படும் Motherதான். அரவிந்தரின் ஆச்ரம சூழலில் 1921ஆம் ஆண்டு ஒரு விசித்திர சம்பவம் நடந்தது.

அப்பொழுது அரவிந்தரும், அன்னையும், ஆன்ம சாதகர்களும் ஒரு வீட்டில் வசித்து வந்தனர். அவர்களுடன் வாதல் எனும் சமையல்காரன் ஒருவனும் இருந்தான். அவனுக்கு துணையாக ஒரு உதவியாளனும் இருந்தான். இந்த உதவியாளன் ஒரு களையற்ற, மெலிந்த மனிதன். சமையற்காரனான வாதல் ஒரு முன்கோபி; இவனுக்கு சில வேண்டாத சகவாசம் இருந்திருக்கிறது.

மாய வேலை, மாந்திரீகம் என்பார்களே, அவை ஆன்மீகமே அல்ல. அவை சுலப முயற்சியினால் பலனளிக்கக் கூடியதுதான். ஆனால், ஆபத்தும், முடிவற்ற வேதனையும் அவற்றால் பிறக்கக்கூடும். மேலும், இது தெய்வ சம்பந்தமே அற்ற ஒரு விஷயம் என்பதால், இதை கண்டு பிரமிப்பதும் மிக தவறு. ஒரு மகமதிய மாந்திரீகனின் நட்புதான், இந்த சமையற்காரனுக்கு (வாதல்) இருந்தது.

ஒருமுறை சமையலில், வாதல் பெரும் தவறிழைத்து விட்டான். தவறு செய்ததால், அவனை பலரும் திட்டினர். வாதல் முன்கோபியாதலால், அரவிந்தர் வீட்டிலுள்ளோரை, கடுமையாக பதிலுக்கு திட்டினான். அது மட்டுமின்றி, "நீங்கள் எல்லோரும் எப்படி இங்கு இருக்கிறீர்கள் என்று பார்த்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு போனான்.

> வாதல் முன்கோபியாதலால் அரவிந்தர் வீட்டிலுள்ளோரை கடுமையாக பதிலுக்கு திட்டினான். அது மட்டுமின்றி நீங்கள் எல்லோரும் எப்படி இங்கு இருக்கிறீர்கள் என்று பார்த்து விடுகிறேன் என்று சொல்லி விட்டு போனான்.

தனக்கு, முன்பே பழக்கமான மந்திரவாதியிடம் சென்று, அரவிந்தர் வீட்டிலுள்ளோரை உபத்திரவம் செய்யும்படி வேண்டிக்கொண்டான் வாதல்.

மஹான்களிடம் விளையாடுவது ஆபத்தில் முடியும். அரவிந்தரை பற்றி தெரிந்து கொண்டிருந்த அந்த மாந்திரீகன், அவர் மேல், தான் ஏதும் பிரயோகம் செய்ய முடியாது என்றும், அப்படி செய்வது தனக்கே ஆபத்தாய் முடியும் என்றும் சொல்லி விட்டான். வாதலுக்கோ, இது அவமானமாகி விட்டது. ஆகையால், ஒரு உடன்படிக்கை செய்து கொண்டான். அதன்படி, அரவிந்தருக்கு எந்த உபத்திரவமும் நிகழாதவாறு, அந்த வீட்டிலுள்ளோர் மீது மாந்திரீகம் செய்யப்பட்டது.

வாதல், வீட்டை விட்டு கிளம்பிய சில நாட்களுக்குள்ளாகவே, அரவிந்தர் வாழ்ந்த வீட்டினுள் கற்கள் விழ ஆரம்பித்தன. குறிப்பாக, இது வாதலின் உதவியாளன் மேலும் சமையல் அறையிலும்தான் விழுந்திருக்கிறது. இது தவிர, கற்கள் ஒரு சாதகி மேலும் பலமாய் விழுந்திருக்கிறது.

கற்கள் விழுந்ததில் மாயமென்னவெனில், எங்கிருந்து கற்கள் விழுகின்றன என்றே தெரியாது. வீட்டினுள் திடீரென விழும் கற்கள், கூரையை பொத்துக்கொண்டு விழுகாது. கூரைக்கும் சேதமிராது. அப்படி விழும் கற்கள் கூட செங்குத்தாக விழும். அஃதாவது துவாரம் வழியாக, சாய்வாக வந்தும் விழாது. துவக்கத்தில் இவற்றை பெரிதும் பொருட்படுத்தாத ஆச்ரமவாசிகள், ஒரு சமயத்தில் இத்தொல்லை பொறுக்காது, போலீசிற்கு தகவல் சொல்லி அனுப்பினர். வந்த காவல்காரர்களும், கற்கள் வந்து விழும் திக்கு அறியாது திகைத்தனர். பின்னர், சமையற்காரனான வாதல் வீட்டை விட்டு சென்ற பின்னரே, இப்படி நடக்கிறது என தெரிந்து கொண்டனர். அவனுக்கு மாந்திரீக மனிதர்களுடன், தொடர்பு உண்டு என காவல்காரர்கள் சொல்லி சென்றனர்.

இந்த கற்கள் வாதலுக்கு உதவியாயிருந்தவனை கடுமையாக காயப்படுத்தவும் செய்திருந்தது. அவனை ஒரு அறைக்கு உள்ளே வைத்து பூட்டினாலும், கற்கள் அவனிருந்த அறையில் விழுவது நிற்கவில்லை.



இவையெல்லாம் அரவிந்தருக்கும், அன்னைக்கும் தெரிந்தாலும், அவர்கள் கவலையே படவில்லை. நிலைமை கட்டுக்கடங்காது சென்றபொழுது, அன்னை அவர்கள், தமது தியானத்தில் சென்று என்னதான் நிகழ்கிறது என அறிந்தார். நோஞ்சானும், வலிமையற்றதுமான சில சூக்கும உலக ஜீவன்கள்தான், இக்காரியத்தில் ஈடுபட்டது தெரிய வந்தது. அவைகளை கடுமையாக அன்னை கண்டிக்க, அவைகளோ, "நாங்கள் ஏதும் குற்றம் செய்யவில்லை. நாங்கள் ஏவி விடப்பட்டிருக்கிறோம். மந்திரத்திற்கு நாங்கள் கட்டுப்பட்டவர்கள். எங்களை ஒன்றும் செய்யாதீர்கள்" என்றனவாம். சிரித்தவாறே, அவைகளை அவ்விடத்திற்கு வரக்கூடாது என, அன்னை விரட்டி விட்டாராம். அதன்பின், கற்கள் விழுவது முழுவதுமாய் நின்று விட்டது. சமையலறை சமீபமாக, சில விசித்திர சித்திரங்களும், சொற்களும் எழுதியிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. அவை அழிக்கப்பட்டன. அன்னை இந்த சம்பவம் குறித்து சொல்கையில், "வெறும் செங்கற்களே அவை. அவைகளை கண்களுக்கு புலப்படும்வண்ணம் செய்வதும், மறைய செய்வதும் சில சூட்சும ஜீவர்களால் சாத்தியமானது" என்றார்.

மந்திரத்தால் ஏவப்பட்ட ஜீவன்கள் துரத்தியடிக்கப்பட்ட பின், வாதல் கடும் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தருவாயை அடைந்தான். அவன் மகள் வந்து, எப்படியாவது வாதலை காப்பாற்றும்படி வேண்டினாள். அரவிந்தருக்கு இந்த செய்தி சென்றது. அவர் சிரித்துக்கொண்டே, "சில கற்களுக்குள்ளாகவா அவனுக்கு இந்த கதி" என்றாராம். ஓரிரு நாட்களில் அரவிந்தர் இப்படி சொன்ன பின், வாதல் உடல்நலமாகி, தேறி, திருந்தினான். இச்சம்பவத்திலிருந்து, மாந்திரீகத்தில் ஈடுபடுவோருக்கு, அதனால் வரும் கேடு தெரிவதில்லை என்று தெரிகிறது. மேலும், அரவிந்தரால்தான், வாதல் காப்பாற்றப்பட்டிருக்கிறான் எனவும் தெரிகிறது.



## பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி : விஷ்ணு மாயை என்கின்றோம். அதுபோல், மற்ற எல்லா தெய்வங்களுக்கும் மாயை உண்டு. அப்படியிருக்க, விஷ்ணு மாயைக்கும், மற்ற தெய்வங்களுடைய மாயைக்கும் என்ன வித்தியாசம்?**

பதில்: மாயாஜாலம் காட்டி, பொருள் சம்பாதிப்பவர்கள் உண்டு. அப்படி மாயாஜாலம் காட்ட, ஒருவர் வந்தார். ஒரு காலி கூடையை கவிழ்த்தார். பிறகு, கவிழ்த்த கூடையை எடுத்தார். அதனுள் ஒரு அழகான மாம்பழம் இருந்தது. மற்றவர்கள் கைதட்டினார்கள்; மகிழ்ந்தார்கள்; வியப்படைந்தார்கள். அந்த மாயாஜாலம் காட்டியவருக்கோ, அந்த மாம்பழத்தின் வாசனை மூக்கை துளைத்தது. அதனுடைய வாசனை, நாக்கில் எச்சிலை கூட்டியது. அவ்வளவுதான்! அந்த மாம்பழத்தை எடுத்து, அவரே சாப்பிட ஆரம்பித்து விட்டார். அது போல்தான், மற்ற தெய்வங்களின் மாயை! அந்த தெய்வங்களின் மாயையில், சமயத்தில் அந்த தெய்வமே மயங்கி விடுவதும் உண்டு. ஸ்ரீமத்பாகவதத்தில், இப்படியாகத்தான் பிரும்மா தன்னுடைய மாயையை கொண்டு மாடு, கன்றுகள், கோபர்களையும் மயக்க பார்த்தார். முடிவில் அவரே அந்த மாயையில் மயங்கி விட்டார். அவரே மோகம் அடைந்தார். அவராலேயே எது உண்மையான மாடு, கன்றுகள், குழந்தைகள் - எது எல்லாம் (எவையெல்லாம்) கிருஷ்ணனே ஆனவை என்று கண்டு பிடிக்க முடியாமல், பகவானிடம் சரண் அடைவதை பார்க்கின்றோம்.

**கேள்வி : வேத மந்திரங்களை கொண்டு கர்மானுஷ்டங்களை செய்யும்பொழுது, பல இடங்களில் ஸோமன் இவனை ரக்ஷிக்கட்டும், வருணன் இவனை ரக்ஷிக்கட்டும், தீர்க்கமான ஆயுள் சித்திக்கட்டும் என்று அந்த ப்ரயோகங்களில் வருகின்றது. அப்படி, ஒரே ஒரு முறை சொல்வதால், அந்தந்த தேவதைகள் ரக்ஷித்து விடுமா என்ன?**

பதில்: ஒருவரை பார்த்து, உன் நண்பன் கூப்பிடுகின்றான் என்று



கூறி அழைக்கின்றோம். அதற்கு அவன், "அவனுக்கு வேறு வேலை இல்லை" என்று பதில் கூறுகின்றான். உன்னுடைய அம்மா அழைக்கின்றாள் என்றால், "நான் ரொம்ப டயர்டாக இருக்கின்றேன் என்று கூறு" என்கின்றான். அப்பா அழைக்கின்றார் என்று கூறினாலும், "எனக்கு நேரமில்லை பிறகு வந்து பார்க்கின்றேன்" என்கின்றான். இப்படியாக யார் கூறினாலும், மறுத்து பேசுகின்றான். அவர்கள் திருப்பி திருப்பி, வற்புறுத்தினாலும் அலட்சியப்படுத்துகின்றானே தவிர செல்லவில்லை. ஆனால் அவனை ராஜா கூப்பிடுகின்றார் என்றால், அலறி அடித்துக்கொண்டு ஓடுகின்றான். அதுபோல்தான், வேறு எப்படி அழைத்தாலும் எத்தனை முறை அழைத்தாலும், தேவர்களோ, தெய்வங்களோ வரும் என்று கூற முடியாது. ஆனால் வேதம் ராஜாவுக்கும்! (ராஜாவை போன்றது). வேத மந்திரங்களை கூறி அழைத்தால் தெய்வமோ, தேவர்களோ அலறி அடித்துக்கொண்டு வந்து அனுக்ரஹம் செய்வார்கள்.



**கேள்வி : ஜனகர் பிரும்மஞானியாக இருந்ததால்தானே, தன்னுடைய நகரமே தீ பிடித்து எரிகின்றது என்ற செய்தி கேட்டும், அவரால் அதைப் பற்றி கவலைப்படாமல் இருக்க முடிந்தது. பக்தரால் இப்படி இருக்க முடியுமா?**

பதில்: ஜனகரோ மிதிலைக்கு மட்டுமே ராஜா. அம்பரீஷனோ, ஏழு த்வீபங்களுக்கும் ராஜா. அங்கே ஜனகருடைய தேசத்திற்குத்தான் ஆபத்து. இங்கு



அம்பரீஷனுக்கே துர்வாசரால் ஆபத்து. ஆனால் எதைப்பற்றியும் கவலைப்படாமலும், பரிகாரம், விமோசனம், போன்று எதையும் தேடாமலும் அமைதியாக இருந்தானே! உயர்ந்த பக்தனுடைய நிலை ஞானியினுடைய நிலை. ஞானியினுடைய நிலையே உயர்ந்த பக்தனுடைய நிலை.






## ஸ்ரீஸ்வாமிஜியின் சிந்தனையில் உதித்த மலர்கள்

☆ நாம் ஒருவரை பார்க்கும்பொழுது, உன் குடும்பத்தில் நீ எத்துனையாவது குழந்தை என்று கேட்பதுண்டு. ஆனால் உலகம் தோன்றியதிலிருந்து, பிறந்துகொண்டே இருக்கும் குழந்தைகளில், நாம் எத்துனையாவது குழந்தை என்று என்றாவது சிந்தித்தது உண்டா?

☆ ஒரு கடினமான பதங்கள் உள்ள பாடலையோ அல்லது கணித தொடர்புடைய சூத்திரங்களையோ, மனனம் செய்வது போன்றது ஜபயோகம். ஒரு கடினமான கணித ப்ராப்ளம்(problem) ஒன்றை, எப்படி (solve)சால்வ் செய்வது என்பதை புத்தி பூர்வமாக புரிந்து கொள்வது போன்றது ஞானயோகம்.

☆ எந்த ஒரு மந்திரத்தில், உனக்கு ஈடுபாடு அதிகமாக உள்ளதோ அல்லது உனக்கு குரு உபதேசமோ, அந்த ஒரு மந்திரத்தை மட்டும் ஜபம் செய்து வந்தாலே போதும். அல்லது, இரண்டு மூன்று மந்திரங்களை ஜபம் செய்ய வேண்டிய அவசியம் இருக்குமானால், தினசரி இந்த மந்திரத்திற்கு என்று, இவ்வளவு எண்ணிக்கை அல்லது நேரம் என்று ஒதுக்கி ஜபம் செய்ய வேண்டும். ஒரு மந்திரத்தை ஜபம் செய்யும் குறுகிய நேரத்திற்குள்ளாகவே, மனது மாறி, பல மந்திரங்களை ஜபிக்குமானால், விபரீத பலன் ஏற்படும்.

"தினம் தினம் திருநாளே" -ஸ்ரீஸ்வாமிஜி சக்தி விகடனில் பல மஹாத்மாக்களின் வாழ்வில் நிகழ்ந்த பல சுவையான சம்பவங்களை எழுதி வந்தார். இதன் இரண்டாம் பாகத்தை, "விகடன்" வெளியிட்டுள்ளது.

"பாகவதத்திலுள்ள பதினெட்டுக்கதைகளும்" , ஸ்ரீஸ்வாமிஜி தமிழில் அருளிய சத் ஸங்கத்தின் சாரத்தினை 'ஒலி'ச்சுருக்கமாக வெளியிட்டுள்ளது. இது ஸ்ரீமத் பாகவத நாமகேந்திர வெளியீடு.

மேலும் விவரங்களுக்கு - +91-44-24895875

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Limited






# பாகவத பழம் 4

**இரண்டாம் பாகம்**

– ஸ்ரீஸ்வாமிஜி

க்ருஷ்ணாவதார கட்டத்திலும் அதற்கு முந்திய அவதாரங்களிலும் பகவான் க்ருஷ்ணனின் பெயர் வருகிறது. விதுரரின் தேஹதியாகத்தைப் பற்றிக் கூறும் பொழுதே, கிருஷ்ண தியானத்துடனே பிரபாஸத்தில் சரீரத்தை விட்டார் என்று வருகின்றது.

**விதுரோபி பரித்யஜ்ய ப்ரபாஸே தேஹமாத்மவான் ।**
**க்ருஷ்ணாவேஸேன தச்சித்த: பித்ருபி: ஸ்வக்ஷயம் யயௌ ॥(1–15–49)**

வராஹவதாரத்தைச் சொல்லும்பொழுது, தனது புத்திரர்கள் கிருஷ்ணனால் மரணமடைவார்கள் என்று கேட்டு, திதி சந்தோஷம் அடைந்தாள் என்று மைத்ரேயர் கூறுகின்றார்.

**ஸ்ருத்வா பாகவதம் பௌத்ரமமோதத திதிர் ப்ருஸம்**
**புத்யோஸ்ச வதம் க்ருஷ்ணாத் விதித்வா (ஆ)ஸீன் மஹாமநா: (3–14–50)**

துருவ சரித்திரத்தைச் சொல்லும்பொழுதும், கிருஷ்ணனைப் பற்றியே சொல்லப்படுகின்றது. துருவனை துருவமண்டலம் அழைத்துச் செல்ல, விமானத்தில் வந்த விஷ்ணுபார்ஷதர்கள் கிருஷ்ண சரணத்தையே நினைத்துக் கொண்டிருக்கும் துருவனைப் பற்றி பேசினார்கள்.

**தம் க்ருஷ்ணபாதாபிநிவிஷ்ட சேதஸம்**
**பத்தாஞ்ஜலிம் ப்ரஸ்ரய நம்ர கந்தரம்**
**ஸுநந்த நந்தாவுபஸ்ருத்ய ஸஸ்மிதம்**
**ப்ரத்யூசது: புஷ்கரநாபஸம்மதௌ (4–12–22)**

மேலும் க்ருஷ்ணனே கதி என்று இருந்த துருவன், துருவ பதவியை அடைந்து பிரகாசித்தான் என்கின்றார்.

**இத்யுத்தானபத: புத்ரோ த்ருவ: க்ருஷ்ண பராயண:**
**அபூத் த்ரயாணாம் லோகாநாம் சூடாமணிரிவாமல: ! (4–12–38)**

ஆறாவது ஸ்கந்தத்தில், விருத்ராஸுர சரித்ரம் வரும்பொழுது

தேவர்கள் சொல்லும் ஸ்துதியிலும் கிருஷ்ண'' என்று பதம் வருவதை கவனிக்கவும்.

**அதோ ஈஶ ஹி த்வாஷ்ட்ரம் க்ரஸந்தம் புவனத்ரயம் ।**
**க்ரஸ்தாநி யேன ந: க்ருஷ்ண தேஜாம்ஸ்யஸ்த்ரா யுதானி ச(6–9–44)**

ப்ருது சக்ரவர்த்தியினுடைய சரித்ரத்தைச் சொல்லும் பொழுது "கிருஷ்ணனுடைய மற்ற கதைகளை" என்று விதுரர் உரைக்கின்றார்.

**யஶ்சான்யதபி க்ருஷ்ணஸ்ய பவான் பகவத: ப்ரபோ:**
**ஶ்ரவ ஸுஶ்ரவஸ: புண்யம் பூர்வதேஹகதாஶ்ரயம் (4–17–6)**

மேலும், ப்ருது கடைசியில் கிருஷ்ணனை அடைய விரும்பி தவம் இயற்றினார் என்கின்றார்.

**ஹம்ஸாய தஹ்ரநிலயாய நிரீக்ஷகாய**
**க்ருஷ்ணாய ம்ருஷ்ட யஶஸே நிருபக்ரமாய**
**ஸத்ஸங்க்ரஹாய பவபாந்தநிஜாஶ்ரமாப்தா**
**வந்தே பரிஷ்டகதயே ஹரயே நமஸ்தே (6–9–45)**

பரீக்ஷித் விருத்ராஸுரனைப் பற்றிக் கேட்கும் பொழுதும், இப்படிப்பட்ட கொடிய அஸுரனுக்கு, எப்படி கிருஷ்ணனிடம் த்ருடபக்தி வந்தது என்கின்றான்.

**வ்ருத்ரஸ்து ஸ கதம் பாப: ஸர்வலோகோபதாபன:**
**இத்தம் த்ருடமதி: க்ருஷ்ண ஆஸீத் ஸங்க்ராம உல்பணே (6–14–6)**

திதி, பும்ஸவன விரதம் என்றொரு விரதம் அனுஷ்டித்தாள். அதைப்பற்றி சொல்லும்பொழுது கிருஷ்ணனையே ஆராதித்தாள் என்று வருவதை கவனிக்க வேண்டும்.

**ஶ்வோபூதே (அ)ப உபஸ்ப்ருஶ்ய க்ருஷ்ண மப்யர்ச்ய பூர்வவத்**
**பய: ஶ்ருதேன ஜுஹுயாச்சருணா ஸஹ ஸர்பிஷா**
**பாகயஜ்ஞவிதானேன த்வாதஶஶாஹுதி:பதி: (6–19–22)**

ருத்ர கீதத்திலும் க்ருஷ்ணாய என்கின்றார்.

**நமஸ்த ஆஶிஷாமீஶ மனவே காரணாத்மனே**
**நமோ தர்மாய ப்ருஹதே க்ருஷ்ணாயாகுண்ட மேதஸே**



**புருஷாய புராணாய ஸாங்க்ய யோகேஶ்வராய ச (4–24–42)**

ப்ரசேதஸர்கள் பல வருடங்கள் கடலுக்குள் தவம் செய்து பகவானை ஸ்துதி செய்யும்பொழுது, க்ருஷ்ணாய ப்ரபவே'' என்கின்றார்கள்.

**நமோ விஶுத்த ஸத்வாய ஹரயே ஹரிமேதஸே**
**வாஸுதேவாய க்ருஷ்ணாய ப்ரபவே ஸர்வஸாத்வதாம் (4–30–24)**

ப்ரியவிரதன் சரித்ரத்தை பரீக்ஷித் கேட்கும் பொழுது, குடும்பத்தில் இருந்த ப்ரியவிரதன், எப்படி கிருஷ்ணனிடத்தில் வழுவாத மனம் உடையவனாக இருந்தான் என்கின்றார்.

**ஸம்ஶயோ(அ)யம் மஹான் ப்ரஹ்மன் தாராகார ஸுதாதிஷு**
**ஸக்தஸ்ய யத் ஸித்திரபூத் க்ருஷ்ணே ச மதிரச்யுதா (5–1–4)**

ஜடபரதர் ரஹூகணனிடம் கூறும்பொழுது, முற்பிறவியில் கிருஷ்ணனை அர்ச்சனை செய்தது பிரபாஸத்தில்தான். எனக்கு நடந்ததெல்லாம் ஞாபகத்திலும் உள்ளது. மேலும் எனக்கு ஞானமும் ஸித்தித்து உள்ளது என்கின்றார்.

**ஸா மாம் ஸ்ம்ருதிர் ம்ருக தேஹே (அ)பி வீர**
**க்ருஷ்ணார்சநப்ரபவா நோ ஜஹாதி**
**அதோ அஹம் ஜனஸங்காதஸங்கோ**
**விஶங்கமானோ(அ)விவ்ருதஶ்சராமி (5–12–15)**

(கனியும்)

**புனித தல யாத்திரை**



**நமது சத்சங்கத்தை சேர்ந்த ஸ்ரீ பம்மல் பாலாஜி, புனித தலங்களான காசி, அலஹாபாத், கயா ஆகிய இடங்களுக்கு யாத்திரை செல்லவிருக்கிறார். விருப்பம் உள்ளவர்கள் இதில் கலந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 9003034997 கைபேசியை தொடர்பு கொள்ளவும்.**

# ஒரு சாதகரின் டைரிக்குறிப்பு

தியானம் பழக பழக, தியானத்தில் மனம் ஆழ்ந்த நிலையில் லயிக்கும். அப்பொழுது நம்மை சுற்றி தெய்வீக அதிர்வுகள் நிரம்பி காணப்படும். மற்றவர்களுக்கு புரிவது போல், எளிமையாக சொல்ல வேண்டும் என்றால், அது ஒரு லேசான மின் அதிர்வு போன்றது. அப்படி ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுது கண்கள் மூடியிருந்தாலும் எல்லா இடத்திலும் நீல நிறம் நிரம்பியுள்ளது போல், ஒரு உணர்வு ஏற்படும். கண்களை திறந்து பார்க்கும் பொழுது எல்லா இடமும் ஒரு திவ்யமான ஒளியால் சூழ்ந்திருப்பது போல் தோன்றும். நேரம் ஆக ஆக, அந்த ஒளியின் தோற்றம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து, இயல்பு நிலைக்கு வந்து விடும். பிறகு தொடர்ந்து தியானம் செய்து வந்தால், இது போல் அடிக்கடி தோன்றும். தியானத்தை சிலகாலம் தொடராமல் இருந்தால், இந்த ஒளி தோன்றுவது முழுவதுமாக நின்று விடும். நல்ல சான்னித்யம் உள்ள இடங்களுக்கும், கோவில்களுக்கும் செல்லும்பொழுது நாம் ஆழ்ந்த தியானத்தில் இருந்தால், அத்தகைய ஒரு ஒளியும் உணர்வும் எந்த ஒரு பிரயத்தனமும் இல்லாமலே சித்திக்கும்.

நேரம் ஆக ஆக, அந்த ஒளியின் தோற்றம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து, இயல்பு நிலைக்கு வந்து விடும். பிறகு தொடர்ந்து தியானம் செய்து வந்தால், இது போல் அடிக்கடி தோன்றும். தியானத்தை சிலகாலம் தொடராமல் இருந்தால், இந்த ஒளி தோன்றுவது முழுவதுமாக நின்று விடும். நல்ல சான்னித்யம் உள்ள இடங்களுக்கும், கோவில்களுக்கும் செல்லும்பொழுது நாம் ஆழ்ந்த தியானத்தில் இருந்தால், அத்தகைய ஒரு ஒளியும் உணர்வும் எந்த ஒரு பிரயத்தனமும் இல்லாமலே சித்திக்கும்.



அதோடு மட்டுமல்லாமல், நான் இயல்பாக இருக்கும் நேரத்தில் நம்மிடம் யாராவது மஹான்களின் பிரசாதத்தை கொடுத்தாலோ, அல்லது ஜபம் செய்த ஏதாவது ஒரு ரக்ஷை என் கையில் பட்டவுடனோ, உடனே ஒரு தெய்வீக மாறுதல்கள் என் சரீரத்தில் உண்டாவதை உணர்ந்தேன். அதிலிருந்து மஹான்களின் பிரசாதமும், தெய்வத்தின் பிரசாதமும், நமக்கு ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்றது என்பதையும் புரிந்து கொண்டேன். அதுபோல் நான் ஒரு ஊருக்கு சென்றால், ஒருவருடைய வீட்டில் வழக்கமாக தங்குவேன். அவர்கள் வீட்டில், மாடியில் உள்ள அறை எனக்கு என்று நிரந்தரமாக ஒதுக்கப்பட்டிருக்கும். என்னைத்தவிர அந்த அறையில் தங்குவதற்கு யாரையும் அனுமதிக்க மாட்டார்கள். ஒருநாள் வெளியூர் சென்றிருந்தபொழுது, அவர்கள் வீட்டிற்கு செல்ல நேரிட்டது. வழக்கம்போல் நான் தங்கும் அறை, எனக்காக திறந்து விடப்பட்டது. உள்ளே நுழைந்தவுடன், அங்கு காம அலைகள் அதிகமாக இருப்பதை என்னால் உணர முடிந்தது. ஒரு நொடியில் இதை நான் அறிந்து கொண்டேன். இதற்கான காரணம் எனக்கு புரியவில்லை.

நான், அந்த வீட்டில் உள்ளவர்களுடன் பின்பு உரையாடிக் கொண்டிருந்தபொழுது, ஒரு செய்தியை சொன்னார்கள். "சென்ற வாரம் திடீர் என்று எதிர்பாராமல் உறவினர்கள் வந்து விட்டார்கள். வேறு வழியில்லாமல் புதியதாக திருமணமான தம்பதிகளுக்கு நீங்கள் தங்கும் மாடி அறையை ஒதுக்கும்படி ஆயிற்று" என்றார்கள். அப்பொழுதுதான் என்னால், காம அலைகளுக்கான காரணத்தை அனுமானிக்க முடிந்தது. ஒருவரிடமிருந்து தீவிரமாக வெளிப்படும் எந்த எண்ணங்களும், அந்த சுற்று சூழ்நிலையை பாதிக்கின்றது என்பதை ஒருவாறு உணர்ந்து கொண்டேன்.

## சனாதனப் புதிர் - பகுதி - 17

( விடைகள் அடுத்த இதழில்)

– ஆத்ரேயன்

1. முருகனுடைய முதல் படைவீடு எது? அதன் மற்றொரு பெயர் என்ன?
2. சிவபெருமானுடைய பஞ்சசபைகள் எங்குள்ளன?
3. ஒரு வைணவப்பெரியார் தனது கொடிய வயிற்று வலி நீங்க முருகனை வேண்டினார். அவர் யார்? எந்த க்ஷேத்திரத்தில் இருக்கும் முருகனை வேண்டினார்?
4. கோயில்களில் பஞ்சபுராணம் பாடப்படுகிறது? இது எதைக்குறிக்கிறது?
5. கருப்பன், வெள்ளையன், காத்தான், தீத்தான் என்று கிராமமக்கள் தெய்வத்தின் பெயர்களை கூறுகின்றார்கள். இவை எந்த தெய்வத்தை குறிப்பிடுகின்றன?
6. சரஸ்வதி தேவியைப்பற்றிய தமிழ்நூல்கள் எவை?
7. அப்பக்குடத்தான் கோயில் எங்குள்ளது? அப்பெயர் வரக்காரணம் என்ன?
8. ஆழ்வார்கள் பாடிய பெருமாள் திருத்தலங்கள், நாயன்மார்கள் பாடிய சிவஸ்தலங்கள் எத்தனை?
9. திருமுருகாற்றுப்படை எனும் நூலில் காணப்படும் ஆறுபடைவீடுகள் எவை?
10. அஷ்டதிக்கஜங்கள் யாவை?


ஸ்ரீ:

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

Zaah TECHNOLOGIES

OUR SOLUTIONS

- SEARCH ENGINE OPTIMIZATION
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- WEB DEVELOPMENT

M/s. Zaah Technologies India Pvt. Ltd.,
E-mail: contact@zaahindia.com




## பாலகர்களுக்கு ஒரு கதை



## வணங்கும் கைகள்

நட்பிற்காகவும், நாட்டிற்காகவும் பலர் உயிர் தியாகம் செய்ததை கேள்விப்பட்டு இருக்கிறோம். தமது குருவான ராமானுஜருக்காக கூரத்தாழ்வார், தமது கண்களையே தந்தார் என பார்க்கிறோம். குழந்தைக்காக, தாய் தன்னையே அர்ப்பணிப்பதை காண்பதரிதல்ல. இப்படியே அன்பினால் உந்தப்பட்டு, தியாகம் செய்வோர் பட்டியல் ஏராளம். பிரதிக்ஞைக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள் உண்டு. தமக்கைக்காகவும், சகோதரனுக்காகவும் தியாகம் செய்து வாழ்ந்தவர் பலர் உண்டு. இதில் சிலரின் தியாகமானது உலகப்புகழ் பெற்று விடும். மஹாத்மா காந்தி போல் சுதந்திர தியாகி பலருண்டு எனினும், இறைவன் அவரது சரித்திரத்தையே பெரிதாக புகழ் பெற செய்துள்ளான் அல்லவா?



அத்தகைய சரித்திரங்கள் காவியமாய் நடையில் இருந்து மக்களின் மனதை பண்படுத்த உதவுகிறது. தியாக சரித்திரங்கள் வாழ்க்கையில் இலக்கு என்பதற்கு, இலக்கணமாய் விளங்குகின்றன. பதினைந்தாம் நூற்றாண்டில், ஜெர்மனி நாட்டில் நியூரம்பர்க் எனும் நகரத்திற்கு அருகில் ஒரு சிறு கிராமத்தை சுற்றிய கதை இது. இக்கிராமத்தில் ஆல்பர்ட் எனும் சிறுவன் தனது தமையனுக்காக செய்த தியாகம், அதன் தன்மை கருதி பாராட்டப்படுகிறது. நாம் பல இடங்களில் காணும் வணங்கும் கைகள் எனும் ஓவியத்திலான SYMBOL . இந்த நிகழ்ச்சியிலிருந்துதான் வந்தது என்பது நம்மில் அநேகருக்கு தெரியாது. இதை பார்ப்போமா?

ஆல்பர்ட் மற்றும் ஆல்ப்ரச்ட் இருவரும் சகோதரர்கள்.

அவர்கள் குடும்பத்தில் பதினெட்டு நபர்கள். தந்தை பெயர் டியூரர்; ஒரு பொற்கொல்லர். அவரது குறைந்த வருமானத்தில் குடும்பத்திற்கு போதுமான உணவளிப்பது கூட பெரும் சிரமமாக இருந்தது. தந்தை ஒருநாளைக்கு பதினெட்டு மணி நேரம் உழைப்பார். மேலும், கிடைத்த வேலைகளையும் செய்வார். ஆனாலும், அவருக்கு கிடைத்த ஊதியம் அற்பம்தான்.

ஆர்வம்தான், எத்தகைய சாதனைக்கும் அடிப்படை. இதனுடன், உழைப்பும், பிறர் ஆதரவும் கூடினாலன்றி பெரும்பாலரின் வாழ்க்கை, நிறைவு பெறாது. ஆர்வம் இருந்தாலோ, முடவனுக்கும் மலையேறுவது சிரமமாய் இராது.

இந்த ஆல்பர்ட் குடும்பத்தில் அவனுக்கும் அவன் சகோதரனுக்கும், குடும்பத்தின் வறுமையான சூழ்நிலையிலும் கூட ஓவியக்கல்வியில் தீராத தாகம் இருந்தது. இளம்பிராயத்திலிருந்தே அவர்களிருவரும் ஓவியம் கற்பது சம்பந்தமாகவே, அதிகம் பேசிக் கொள்வர். இருவருக்கும் மற்றவரின் ஆசை தன் போன்றதே என தெரியும். சமயத்தில் இரவு தூக்கத்தின் முன், இது விஷயமாக தாங்கள் எப்படி பெரிய ஓவியர் ஆவோம் என்று கற்பனை செய்வர். குடும்ப நிதி நிலை மனதிற்கு தோன்றி, அதை பகற்கனவு என்பதை ஞாபகப்படுத்தும். உடன், இருவரும் ஒருவரை ஒருவர் தேற்றி கொள்வர் "நான் உழைத்து உன்னை படிக்க வைக்கிறேன்" என்பான் ஆல்ப்ரச்ட். "ஆல்பர்ட்டோ இல்லை, இல்லை; நீ முதலில் படி; அப்புறம் நான் படிக்கிறேன்" என்பான். சிறு வீட்டில் வாழ்க்கை. வறுமை எனினும், குதூஹலத்துக்கு குறைவில்லை.

சிறுவர்களின் மனம் தந்தைக்கு தெரியும்; அவரால் ஒன்றும் செய்ய முடியாது. தகுந்த வயது வந்தவுடன், நியூரம்பர்க்கிற்கு ஆல்ப்ரச்ட் கல்விக்காக சென்றான். ஆல்பர்ட் தன் சகோதரனின் படிப்பிற்கு உதவ, உழைக்க சென்றான். அவனுக்கு சுரங்கத்தில் வேலை கிடைத்தது. நான்கு வருடங்கள் ஆல்ப்ரச்ட் படிக்க வேண்டும். அப்புறம்தான் ஆல்பர்ட் அதே படிப்பை தானும் படிக்க முடியும். ஆல்பர்ட்டிற்கு கடின வேலை. களைப்பால் அயருகையில்,,



அவன் கண் முன் தன் ஸகோதரன் ஆல்ப்ரைட் ஓவியம் பயில்வது போல் தோன்றும். உடனே, மனதில் மகிழ்ச்சி களை கட்டும். கூடவே தன் ஸகோதரன் தன்னிடம், "நான் படித்து முடித்தவுடன் நிச்சயம் உன்னை படிக்க வைப்பேன்; இது உறுதி" என்று கூறியதும் நினைவுக்கு வரும். இதை எண்ணும்தோறும் அவனுக்கு விழிநீர் பார்வையை மறைக்கும். ஒரு நிமிடம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு, முகத்தை துடைத்து கொள்வான். சக ஊழியர் ஏதேனும் கேட்டால், ஒன்றுமில்லை என்பான். கிடைத்த உணவை உண்டு, இரவிலும் கனவில் ஆல்ப்ரைட் ஓவியம் வரைவது போல் தோன்றும். மனம் கிளர்ச்சியுற்று, உற்சாகம் ஊற்றெடுக்கும். அடுத்த நாள் புதிய நாள்தான்.

சிறுவர்களுக்கிடையே ஒப்பந்தப்படி, நான்கு வருடம் ஆல்ப்ரச்ட் நன்கு ஓவியம் பயில்வது. பின், அதைக்கொண்டே செல்வம் திரட்டி, ஆல்பர்ட்டை படிக்க வைப்பது என்பதுதான். ஆல்ப்ரச்ட் தன் கல்வியில் முதன்மையாக விளங்கினான். வண்ண ஓவியம் தீட்டுவதோ, மரத்தில் அழகிய வேலைப்பாடு செய்வதோ, செப்புத்தகடுகளில் உருவம் தட்டுவதோ அவனுக்கு கை வந்த கலையாய் போயிற்று. ஓவியக்கலையில், அனைவரினும் இவனே சிறந்து விளங்கினான்.

நான்கு வருடங்கள் கல்வி முடிந்தபின், ஆல்ப்ரச்ட் தனது கிராமத்திற்கு வந்தான். தந்தை டியூரர் மிகவும் மகிழ்ச்சியுற்று, அனைவருக்கும் ஒரு விருந்தளித்தார். ஒரே மகிழ்ச்சி எங்கும் நிறைந்து இருந்தது. அப்பொழுதும் தனது சகோதரனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை, ஆல்ப்ரச்ட் மறக்கவில்லை. பலர் முன்னிலையில், அவன் தன் சகோதரனை அழைத்தான். "ஆல்பர்ட், இங்கு வா. இனி நீ உன் கல்வியை தொடரலாம். அதற்கான செலவை நான் ஏற்றுக் கொள்வேன்" என்றான். ஆல்பர்ட் சந்தோஷம்தானே பட வேண்டும்! மாறாக அவன் தனது இருக்கையில் இருந்து எழவே இல்லை. ஆல்ப்ரச்ட் வற்புறுத்திய பின், "முடியாது, என்னால் செல்ல முடியாது" என சற்றே பலமாக

பதிலுரைத்தான். ஏன் என புதிருடன் ஆல்ப்ரச்ட் கேட்க, தயங்கியவாறு, பலர் முன்னிலையில் எழுந்து நடந்து தன் தமையன் அருகில் சென்றான் ஆல்பர்ட். அவன் கண்களில் நீர் தளும்பி நின்றது. ஒரு சின்ன விசும்பல் அவன் முகத்திலிருந்து வெளிப்பட்டது. பீறிட்டு வரும் அழுகையை அடக்கியவன் போல், தொண்டை அடைக்க பேசினான் ஆல்பர்ட்.

"சகோதரா! என் கைகளை பார். அவை சுரங்கத்தில் வேலை செய்கையில், பன்முறை சுத்தியினால் அடிபட்டிருக்கிறது. அனைத்து விரல்களிலும் ஒருமுறையாவது எலும்பு நொறுங்கியிருக்கிறது. ஒரே நிலையிலமர்ந்து, பல மணி நேரம் உழைத்ததால், உடம்பில் பல இடங்களில் தசைப்பிடிப்பும், நரம்புகளில் தளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. கைகள் நடுங்குகின்றன பார்! என்னால் இப்பொழுது உனக்கு ஒரு கோப்பை நீர் கூட சிந்தாமல், சரியாக எடுத்து தரமுடியாது. இத்தகைய நிலையில், என்னால் தூரிகை எப்படி பிடிக்க முடியும்? நளினமான வளைவுகளை, எப்படி நேர்த்தியாக வரைய முடியும்? என்னால் இனி ஓவியம் கற்க செல்ல இயலவே இயலாது" என்றான். விக்கித்து போனான் ஆல்ப்ரச்ட். அவன் குடும்பத்திலுள்ள அனைவருக்கும், அப்பொழுதுதான் ஆல்பர்ட்டின் தியாகம் முழுமையாக புரிந்தது. இது கழிந்து இருநாட்கள் சென்றன.

ஆல்ப்ரச்ட் மனதில் தமையனின் தியாகமும், அவன் கைகளும் மறையவே இல்லை. அதையே ஒரு அற்புதமான ஓவியமாய் வரைந்தான். அதில் தன் தமையனின் கைகள் வான் நோக்கி வணங்குவதாய் அமைத்தான். அதற்கு "கைகள்" என்றுதான் அவன் பெயரிட்டான். தமையனுக்கு தன் மனதால் செலுத்திய அஞ்சலி அது. பலரும் உணர்ச்சிவயப்பட்டு, அதற்கு வணங்கும் கைகள் (Praying Hands) என்று பெயரிட்டனர். 450வருடங்கள் கடந்தும், இன்றும் அது தியாகத்தின் பெருமையை பறைசாற்றியவாறு இருக்கிறது. அதன் பெருமையும் மதிப்பும் குறையவே இல்லை.



## சென்ற மாத நிகழ்ச்சிகள்

### மதுரஸ்மரணம் - My Guru as I see HIM

சென்ற வருடம் ஸ்ரீஸ்வாமிஜியின் ஜெயந்தியை ஒட்டி திரு.பாக்யநாதன் சென்னை ப்ரேமிக பவனத்தில், ஸ்ரீஸ்வாமிஜியின் சரித்திரத்தையும் அன்பர்களின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களையும், மிக அழகாக 17நாட்கள் பேசினார். இதை நேரில் கேட்க முடியாத வெளிநாட்டு அன்பர்கள் இதை கேட்க மிகவும் ஆசைப்பட, சமீபத்தில் மலேசியா மற்றும் சிங்கப்பூர் சென்றிருந்தபொழுது, அங்கும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் சரித்திரம் குறித்து பேசியிருந்தார். இதுபோலவே தூத்துக்குடியில் திரு.கதிரேசன் அவர்கள் ஏற்பாட்டில், நமது சத்சங்க அன்பர்கள் முன்னிலையில், மே29ஆம் தேதியும், சிவகாசியில் திரு.குமாரவேல் அவர்களின் அழைப்பிற்கிணங்க, யோகிராம்சுரத்குமார் பஜனாச்ரமத்தில் மே30ஆம் தேதியும் பேசினார். இதில் "குருவானவர் சகல தெய்வங்களின் ஸ்வரூபம் என்பதே ஒரு சீடனின் பாவனை. அப்படிப்பட்ட குருநாதர், எப்படி சகலருக்கும் சுலபராய், எளிமையாக நடந்து கொண்டு, தம்மை அண்டுவோர்க்கு இறைநாமத்தின் வற்றாத இன்பத்தை போதித்து, வாழ்வில் அவர்களுக்கு அபயமளித்து , அவர்களை இறைவனின் திருவடியில் கொண்டு சேர்க்கிறார்" என்பதையும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கருணை உள்ளத்தையும் எடுத்து பேசினார், வந்திருந்த அன்பர்கள், மிகவும் ஆழ்ந்து கேட்டு பரவசப்பட்டனர். கண்களில் நீர் மல்க, பலர் ஆனந்தப்பட்டனர். திரு.பாக்யநாதன் இதே தலைப்பில், ஸ்ரீஸ்வாமிஜியின் அன்பர்கள் வாழ்வில் நிகழ்ந்த சுவையான சம்பவங்கள் குறித்து நாமத்வார் இணையதளத்தில் தற்பொழுது பேசி வருகிறார்.



**ஜூன்14 ஸ்ரீயோகிராம்சுரத்குமார் நாமசங்கீர்த்தனபூர்த்தி** – சென்னை ப்ரேமிக பவனத்தில் பகவான் யோகிராம்சுரத்குமார் பக்தர்களால் 48நாட்களாக நடைபெற்ற நாமகீர்த்தனம், ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில், பூர்த்தி அடைந்தது. ஜூன்14ஆம் தேதியன்று, ஸ்ரீயோகிராம்சுரத்குமார் மற்றும் நம் ஸ்ரீஸ்வாமிஜி ஆகியோரின் வாழ்விலிருந்து, சுவையான மிக அரிய தகவல்கள் குறித்து திரு.பாக்யநாதன் உரையாற்றினார்.



**மே 27 வேதவித்யாஆச்ரமம், மேல மாம்பலம்** – மாம்பலம் வேதவித்யா ஆச்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி, ஸ்ரீநரசிம்ம ஜெயந்தியை முன்னிட்டு ப்ரஹ்லாத சரித்திரம் உபன்யாசம் செய்தார்கள்.

**மே28 மதுரபுரி- காஞ்சி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹாஸ்வாமிகள் ஜெயந்தி** – காஞ்சி மஹாஸ்வாமிகளின் ஜெயந்தி, மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி மற்றும் வேதபாடசாலை வித்யார்த்திகளால் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.



**ஜூன் 5 சேலம்** – சேலத்தில் இயங்கி வரும் இரு நாமத்வார்களுக்கும் ஸ்ரீஸ்வாமிஜி சென்று இருந்தார். அன்றும் மறுநாளும் அங்கு வந்திருந்த அன்பர்களுக்கு அருளாசிகள் வழங்கினார். இவ்விருநாட்களில், மேச்சேரி அமரதானூர், ஓமலூர் முத்து நாயக்கன்பட்டி, சேலம் குகை, சேலம் ஆஞ்சநேயர் கோவில் ஆகிய இடங்களுக்கு சென்று, ஸ்ரீஸ்வாமிஜி அங்கு கூடியிருந்த அன்பர்களுடன் சத்சங்கம் நிகழ்த்தி விட்டு, தாராபுரம் கிளம்பி சென்றார்.

**ஜூன் 6 தாராபுரம் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** – பழனி அருகிலுள்ள தாராபுரத்தில் சுமார் 800அன்பர்கள் முன்னிலையில், முத்து வள்ளியம்மை திருமண மண்டபத்தில், மஹாமந்திர கூட்டு



பிரார்த்தனை நடைபெற்றது. இதில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்துகொண்டு மஹாமந்திரத்தின் பெருமை குறித்தும், ஆழ்வார்கள் நாயன்மார்களின் பக்தி குறித்தும் அருளுரை வழங்கினார். முன்னதாக அருகிலுள்ள காடுஅனுமன் கோவிலுக்கு சென்று வந்தார். தமது அருளுரையின்பொழுது, அக்கோவிலின் பெருமை குறித்தும் பேசினார்.

**ஜூன் 9 – 11 தஞ்சாவூர் நவநீத கிருஷ்ணன் கோவிலில்** – ஸ்ரீஸ்வாமிஜியின் உபன்யாசம் நடைபெற்றது. இது பகவத்கீதா பிரவசன மண்டபத்தில் நடந்தது. தஞ்சாவூர் மஹாமந்திர சத்சங்க ஒருங்கிணைப்பாளர்களுடன் ஒரு நேரடி சந்திப்பும், சத்சங்கமும் ஆண்டாள் கல்யாண மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில், ஸ்ரீஸ்வாமிஜி சுமார் 150அன்பர்களுடன் கலந்து பேசி ஆசிகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பல அன்பர்கள் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் கௌரவிக்கப்பட்டனர்.



**ஜூன் 5-12 மும்பை சத்சங்கங்கள்** – சௌ. பூர்ணிமாகுமாரஸ்வாமி மற்றும் சௌ.பிரியங்கா ஆகியோர் கலந்துகொண்ட சத்சங்கங்கள் மும்பையில் பல இடங்களில் நடைபெற்றன. பூர்ணிமாஜி, பார்லே சேவாமண்டலியில் சுந்தரகாண்டம் குறித்து ஜூன்5, 6 தேதிகளில் உரையாற்றினார். ஜூன் 8-12 வரை சவுத் இண்டியன் பஜன் சமாஜத்தில் பூர்ணிமா மற்றும் பிரியங்கா பல பக்த சரித்திரங்கள் குறித்து உரையாற்றினர்.

**மே / ஜூன்- துபாய், பஹரைன் சத்சங்கங்கள்** – ஸ்ரீராமானுஜம் மற்றும் ஸ்ரீபாலாஜி பாகவதர் ஆகியோர் பஹரைன் மற்றும் துபாய் நாடுகளில் திரளான அன்பர்கள் மத்தியில் சத்சங்கம் நிகழ்த்தினர். இந்த சத்சங்கங்கள் பல நாட்கள் பல இடங்களில் நடைபெற்றது. பாகவத பாராயணம், பாகவத உபன்யாசம், இராமாயண வைபவம், பக்த

சரித்திரம், கார்பரேட் வொர்க்ஷாப் ஆகியன இடம்பெற்றன. இவற்றை அந்நாடுகளில் உள்ள குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவைனிடி டிரஸ்டு அன்பர்கள் மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.




**கீழ்க்கண்ட டிரஸ்டுகளின்** Annual Trustees Meeting குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் நடைபெற்றது. இதில் அனைத்து டிரஸ்டிகளும் கலந்துகொண்டனர். சென்ற வருடம் நடைபெற்ற பணிகள், நன்கொடைகள் - வரவு செலவு கணக்குகள் குறித்து விவரிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| தேதி | இடம் | டிரஸ்ட் பெயர் |
|---|---|---|
| ஏப்ரல் 30, 2010 | 26/1, ராம க்ருஷ்ணாபுரம் 2வது தெரு, மாம்பலம், சென்னை-33 | 1. குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்டு, சென்னை |
| ஜுன் 18, 2010 | 51, 7வது அவென்யூ அசோக்நகர், சென்னை-33 | 1. ஜெய ஹனுமான் சேவா டிரஸ்ட், சென்னை<br>2. ஜெயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வேத ஆகம பாடசாலா, திருநாங்கூர்<br>3. ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்ட், சென்னை |
| ஜுன் 19, 2010 | | 1. குருஜி ஸ்ரீமுரளீதர ஸ்வாமிகள் மிஷன், சென்னை<br>2. சைதன்யமஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா, சென்னை |



## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி ஸ்ரீதேவகிநந்தன் கோஸ்வாமி-2



விடிந்தவுடன் தவறிழைத்த அந்த இளைஞனோடு அவனது பெற்றோர்களும் சென்று, கோஸ்வாமி ப்ரபுபாதருடைய சரணகமலங்களில் சாஷ்டாங்கமாக விழுந்தனர். அந்த இளைஞன் அழுதவாறே "தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் ஒரு முட்டாள். அதனால்தான் உங்களுக்கு பெரும் கஷ்டத்தையளித்து விட்டேன். தயவு செய்து என்னை மன்னியுங்கள்" என்று கூறி ப்ரார்த்தித்தான்.

கோஸ்வாமிப்ரபுபாதர் "எதற்காக உன்னை மன்னிக்க வேண்டும்? நீ அப்படி என்னப்பா தவறு செய்தாய்?" என்று கேட்டார். அந்த இளைஞனால் ஒன்றுமே கூற முடியாத நிலையில் அவனது தந்தை முந்தைய தினம், தனது மகன் ஊசியால் குத்தியது, கனவில் நிதாயிமஹாராஜ் ஆணையிட்டது என , அனைத்து விஷயங்களையும், ப்ரபுபாதரிடம் கூறினார். இதைக்கேட்டு அவர் "என்னை யாரும் ஊசியால் குத்தவில்லை. உன்மேல் நிதாயி மஹாராஜ் இவ்வாறு ஏமாற்றியாவது க்ருபை செய்துள்ளார். நீ தன்யனானாய்" என்று கூறினார்.

ஒவ்வொரு ஏகாதசிக்கும் தேவகீநந்தன் ப்ரபுபாத் அவர்கள், பண்டித் ராமக்ருஷ்ணதாஸ் பாபாஜியினுடைய குடீரத்திற்கு அவசியம் செல்வார். இருவரும்

> ஸனாதன கோஸ்வாமியின் ஸமாதிக்கு பின்னால் அவர் ஒரு நீல நிற பாலகனை பார்த்தார். அவன் ஒரு மாட்டை கறந்து கொண்டிருந்தான். அது தனது கன்றை நக்கிக்கொண்டிருந்தது. அந்த பாலகனின் அழகில் மயங்கி கோஸ்வாமி அப்படியே நின்றுவிட்டார். அச்சிறுவன் அவரை பார்த்து "கோஸாயி! என்ன பார்க்கிறீர்? உங்களை பார்த்து என் மாடு உதைத்து விட போகிறது. பால் எல்லாம் வீணாகி விடும்" என்றான்.

அன்புடன் பேசிக்கொள்வர். அப்படியொரு நாள், தேவகி நந்தன் ப்ரபுபாத், ராமக்ருஷ்ணதாஸ் பாபாவிடம் "பாபா! வாழ்க்கையின் அஸ்தமன கட்டத்திற்கே வந்தாகிவிட்டது. ஆனால், ப்ரபு என் மேல் இன்னும் க்ருபை செய்யவில்லையே! என் நிலை என்னவாகுமோ! என்று வேதனையில் கூறினார்.



பாபா "கோஸ்வாமிஜீ! தாங்களே இவ்வாறு கூறினால் என் நிலைமை என்னவென்று கூறுவது? பகவானை ப்ரேமையால் தாங்கள் வசப்படுத்தியுள்ளீர்கள். உங்கள் பின்னாலேயே பகவான் எப்பொழுதும் அலைகிறான்" என்று கூறினார்.

அன்று ப்ரபுபாதர் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். ஸனாதன கோஸ்வாமியின் ஸமாதிக்கு பின்னால், அவர் ஒரு நீல நிற பாலகனை பார்த்தார். அவன் ஒரு மாட்டை கறந்து கொண்டிருந்தான். அது, தனது கன்றை நக்கிக்கொண்டிருந்தது. அந்த பாலகனின் அழகில் மயங்கி கோஸ்வாமி அப்படியே நின்றுவிட்டார். அச்சிறுவன் அவரை பார்த்து "கோஸாயி! என்ன பார்க்கிறீர்? உங்களை பார்த்து என் மாடு உதைத்து விட போகிறது. பால் எல்லாம் வீணாகி விடும்" என்றான்.

பாலகன் பேசியதை கேட்டதும், ப்ரபுபாதர் சுதாரித்துக்கொண்டு, முன்னே நடந்தார். ஆனால் அந்த பாலகனின் மதுரமான ரூபம் அவர் ஹ்ருதயத்தில் பதிந்துவிட்டது. இரண்டே அடிகள் முன்னாடி வைத்து, அவனை திரும்பி பார்க்கும் ஆவலோடு கழுத்தை திருப்பினார். ஆச்சர்யம்! அங்கு மாடுமில்லை! சிறுவனுமில்லை! ஏங்கும் தன் பக்தர்களுடன் பகவான் இவ்வாறு லீலை புரிவது அவனது வாத்ஸல்யத்தின் ஒரு வெளிப்பாடே அன்றோ!

(தொடரும்)



## மாலே மணிவண்ணா – 85

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

"நின் ஆர்வலர் தொழுதகை அமைதியின் அமர்ந்தோயும் நீயே!" என்கிறார் அடுத்து. எம்பெருமானே! நின் அன்பர்கள் உன்னைக் கும்பிடுகிற கையினது தாழ்ச்சிக்கண் நீ அகப்பட்டுக்கொள்கிறாய். அகண்டாகாரப்பரம்பொருளாக இருக்கின்ற நீ அன்பினால் உன்னை வழிபடுவாரிடத்தில் மிக மிக எளியவனாக ஆகிவிடுகின்றாய். அவ்வாறு வழிபடுவார்க்கு நீ ஏவலாளனாகவும் ஆகிறாய் என்கிறார். "அவரவர் ஏவலாளனும் நீயே!"

எம்பெருமானுக்கு தொண்டராக இருப்பவர்களுக்கு, எம்பெருமான் தொண்டராக இருக்கிறானாம். அவர்கள் சொன்னதை எல்லாம் செய்கிறானாம். அப்படித்தானே திருமழிசையாழ்வார், தன் சீடன் கணிக்கண்ணன் பின்னால் புறப்பட்டபோது பெருமானை அழைத்தார்.

**கணிக்கண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்கவேண்டா – துணிவுடைய**
**செந்நாப்புலவனும் போகின்றேன் நீயும் உன்தன்**
**பைந்நாக பாய் சுருட்டிக்கொள்**

என்று ஆழ்வார் சொன்னவுடனே, தன்னுடைய பாம்புப்படுக்கையை சுருட்டி தோளில் போட்டுக்கொண்டு, ஆழ்வார் பின்னாலே சென்று, ஓர் இரவு இருக்கை செய்து, மீண்டும் ஆழ்வார்,

**கணிக்கண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி**
**மணிவண்ணா நீ போகவேண்டா துணிவுடைய**
**செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன் நீயும் உன்தன்**
**பைந்நாகப்பாய் விரித்துக்கொள்**

என்று சொல்லிய அளவிலே திருவெஃகாவில்

படுத்துக்கிடந்த வரலாறு நாம் அறிந்ததே. ஆழ்வாராகிய தம் தொண்டர்க்கு, ஏவலாளனாகப் பெருமான் புறப்படு என்றால் புறப்பட்டும், திரும்பு என்றால்





திரும்பியும், இட்டபணியை இட்டவாறு செய்வான் என்பதை முன்னரே அறிந்து வைத்து பரிபாடல் "அவரவர் ஏவலாளனும் நீயே" என்று பெருமானை சொல்லிய அழகு நினைதோறும் இன்பம் பயப்பது.

இதனாலேயே இருபதாம் நூற்றாண்டுக் கவிச்சக்கரவர்த்தியாகிய பாரதியார், கண்ணன் என் சேவகன் என்று பாடினார். **நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்**


**பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய் கண்ணன்** விளங்கும் காட்சிகளையெல்லாம், சொல்லி சொல்லி ஆனந்தப்படும் சுவைமிகுந்த பாடல்கள் எல்லாம், பரிபாடலை மெய்ப்பிக்கும் அன்றோ!! முடிவுரையாக நான்காம் பாடலை முடிக்கிறபோது பரிபாடல் "அவரவர் செய்பொருட் காரணமும் நீயே" என்று அற்புதமாக நிறைவு செய்கிறது.

(தொடரும்)



## சனாதனப் புதிர் : பகுதி – 16 விடைகள்

–ஆத்ரேயன்



1. ப்ரஹ்மசூத்ரம் வேதவியாசரால் இயற்றப்பட்டது. இதற்கு பாஷ்யம் எழுதியவர் ஆதிசங்கரர். இதற்கு விளக்கவுரை எழுதியவர் வாசஸ்பதி மிஸ்ரா-இதற்கு பாமதீ என்று பெயர். இதற்கு கல்பதரு என்ற உரையை அமலாநந்தர் எழுதினார். இதற்கு ஆபோகம் என்ற உரையை லக்ஷ்மிநரசிம்மர் எழுதி இருக்கிறார்.
2. வில்லிபுத்தூராரின் கவிதைப்புலமை செருக்கை அடக்க அருணகிரிநாதர் அருளியது கந்தர் அந்தாதி.
3. ஸ்ரீபகவான் கிருஷ்ணனிடம் இருந்தது.
4. தேவயக்ஞம், ப்ரம்மயக்ஞம், பித்ரு யக்ஞம், மனுஷ்ய யக்ஞம் (விருந்தோம்பல்), பூதயக்ஞம் (மிருகம், பக்ஷிகள், எளியவர்கள் இவர்களுக்கு உணவு அளிப்பது).
5. ஜாம்பவான், அகஸ்தியர், மார்க்கண்டேயர்
6. வைத்யநாததீக்ஷிதர் - மற்றொரு பெயர் வைத்யநாத தீக்ஷிதீயம் - ஒப்பற்ற தர்மசாஸ்திர நூல்..
7. ராமேஸ்வரத்தில் ப்ரும்மஹத்தி தோஷம் நீங்க, வேதாரண்யத்தில் வீரஹத்தி தோஷம் நீங்க, பட்டீஸ்வரத்தில் சாயாஹத்தி தோஷம் நிவிருத்திக்காக ராமர் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து, பூஜித்தார் என்பது வரலாறு. ஆகவே இங்கே உள்ள லிங்கங்கள் "ராமலிங்கம்" என்றே அழைக்கப்படுகின்றன.
8. குமரிலபட்டர் என்ற பூர்வ மீமாம்ஸகர் - உரை எழுதியவர் - பட்டஸோமேச்வரர்.
9. சிலப்பதிகாரம்- இளங்கோ அடிகள்; மணிமேகலை- சீத்தலைசாத்தனார்; குண்டலகேசி - நாதகுத்தனார்; வளையாபதி - தெரியவில்லை; சீவகசிந்தாமணி- திருத்தக்கதேவர்.

   (வளையாபதி, குண்டலகேசி - இந்த நூல்கள் முழுவதும் கிடைக்கவில்லை - சில பாட்டுக்களே கிடைத்துள்ளன.)
10. மஹாபாரதத்தில் காணப்படும் யக்ஷப்ரச்னம்படி, பகலில் ஒரு மணிக்கு மேல் தனது வீட்டில் வேக வைத்த கீரையை புசித்து, கடன் வாங்காமல், தனது ஊரை விட்டு பிற இடத்திற்கு செல்லாமல், விதிக்கப்பட்ட கர்மானுஷ்டானங்களை முறையாக செய்பவன் பிராமணன் - இப்படிப்பட்டவரை இன்று காண்பது அரிது.

## அக்ஷரமணமாலை (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-171)

மூக்கிலன் முன்காட்டு முகுரமாகாதெனைத்
தூக்கியணைந்தருள ருணாசலா

குழந்தை அழகாக இருந்தால், மூக்கும் முழியுமாக இருக்கிறது என்கிறோம். மூக்கு அசிங்கமானால் முகமும் அசிங்கமாகி விடும். மூக்கு அழகற்றதெனில், பழக தயங்குவர். அவமானமாகவும் கருதுவர். அப்படி அழகற்ற மூக்குடைய ஒருவன் முன்னால் சென்று "இதோ கண்ணாடி; இதில் உன்னை பார்த்துக்கொள்" என்றால் அவனுக்கு எவ்வளவு அவமானமாக இருக்கும்! ("மூக்கிலன் முன்காட்டு முகுரம்"- முகுரம் என்றால் கண்ணாடி என அர்த்தம்).

ஒரு சித்திரத்தை ஒருவன் பார்த்து தியானம் செய்கிறான். கண் வழியாக இங்கு பார்வை செல்கிறது. இது தியானம். இப்படி தியானம் செய்ய இயலாதவர்கள், மூச்சை பந்தப்படுத்தி மனதை அடக்கலாம். அப்படி மூச்சை அடக்கியவர்களுக்கு மனம் எளிதில் ஒருமுகப்படும். அந்த ஒருமுகப்பட்ட மனதில், தியானமும் விசாரமும் எளிதில் சித்திக்கும். கண்களினூடே பார்வை செல்கிறது என்றால், மூக்கு வழியாக மூச்சு செல்கிறது. இப்படி பார்வை வழியினாலும், மூச்சின் வழியினாலும் வெளிப்படுவது மனதுதான்.

ஒரு விஷயத்தில் ஒருவன், மனதை மறுபடி செலுத்த முடியாத அளவிற்கு தாழ்ச்சியுற்றானெனில் "மூக்கறுந்து போனான்" என வழக்கில் கூறுகிறோம். மேலும் வாதங்களில் தோற்றவனை "மூக்கறுபட்டான்" என்கிறோம். மூக்கறுவது என்பதை தலைக்காட்ட முடியாத அவமானம் ஏற்பட்டதற்கு ஒப்பாகத்தானே குறிப்பிடுகிறோம்? ஆங்கிலத்தில் கூட இதையே nose cut என்றுதான் குறிப்பிடுகிறோம்.

இங்கு ஒரு சாதகன் தனது அகவாழ்வில், கர்ம வாசனைகளால் துன்பப்படுகிறான். அவன் தன் தெய்வத்தையோ, குருவையோ நாடுவதும், வணங்குவதும் இந்த மனமென்னும் மாயையிலிருந்து, தன்னை விடுவித்து அருள வேண்டும் என்பதற்கே. அப்படி அண்டும் சாதகனிடம் , ஒரு தெய்வம் "உனது இழிவான மனதை பார்; எப்படி இருக்கிறது" என்று இட்டு காட்டினால் எப்படி இருக்கும்? அது மூக்கில்லாதவன் முன்னால் கண்ணாடியை காட்டுவது போன்றதே ஆகும்.

அருணாசலா நீ சர்வ சக்தன்! உன்னால் என்னை முழுவதுமாக



மாற்ற முடியும். (மூக்கற்றவன் ஏளனம் செய்யப்படுவதுபோல்), நான் பிறர் கண்டு ஏளனப்படுமளவிலிருந்தாலும், அதிலிருந்து மீண்டு எழுந்து வருமாறு நீ செய்ய முடியும். (ஒரு சாதகன் புலன்களினால் பன்முறை வீழ்வானே எனினும், தீரனாக மறுபடியும் சரியான பாதையில் செல்வதையே லட்சியமாக கொள்ள வேண்டும்.)

அருணாசலா! உன்னை அண்டும் என்னிடம் உள்ள குற்றங்களை காணாது, அவற்றை முழுவதுமாக களைந்து, என்னை தூயவனாக்கி, என்னை உன்னுடன் சேர்த்துக்கொள் என்று பிரார்த்திக்கிறார் ரமண மஹரிஷிகள்.

(தொடரும்)

Madhuramurali
- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்
Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875

### ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஜூலை8,22,ஆக6 | ஏகாதசி |
| ஜூன் 25-ஜூலை 1 | பெங்களூர் பாகவத சப்தாஹம் |
| ஜூலை 11 | திருவல்லிக்கேணி பாண்டுரங்கன் கோவில் |
| ஆகஸ்டு 15 | "நாதசுதா" - நங்கநல்லூர் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.